ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நாணயத் திணைக்களம்
திகதி 2021.02.24

## இலங்கை மத்திய வங்கி அதன் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சுற்றோட்ட நியமத்திலான ஞாபகார்த்த நாணயக் குற்றியினை வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கி, 1950 ஓகத்தில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கி இலங்கையின் சுபீட்சத்திற்கு அதன் தனித்துவமும் பெறுமதிவாய்ந்ததுமான பங்களிப்பின் 70 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது. அதன் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக 2020 திசெம்பர் 31 அன்று ரூ.20 வகை சுற்றோட்டத்திற்கு விடப்படாத ஞாபகார்த்த குற்றி (அலுமீனிய வெண்கலம்) ஒன்றினை வெளியிட்டது. இதற்குச் சமாந்தரமாக மேற்குறித்த சுற்றோட்டத்திற்கு விடப்படாத ஞாபகார்த்தக் குற்றியினை ஒத்த வடிவத்துடன் கூடிய ரூ.20 வகை சுற்றோட்ட நியமத்திலான ஞாபகார்த்தக் குற்றியொன்றினை (நிக்கல் பூசப்பட்ட உருக்கு) வெளியிடுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. நாணயத்தின் விரிவான விபரம் மற்றும் உற்பத்திக் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| நாணயத்தின் முன்பக்கம் | நாணயத்தின் பின்பக்கம் |
|---|---|
|  |  |
| குற்றியின் முன்புறம் “70” என்ற இலக்கம் பெரிதாக தோன்றுவதுடன் கூடிய இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் உருவப்படத்தினை குற்றியின் மையத்தில் காட்டுகின்றது. “இலங்கை மத்திய வங்கி” என்ற சொற்கள் விளிம்பு ஓரத்தில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் தோன்றுகின்றன. 1950-2020 என்ற வருடங்கள் குற்றியின் கீழ் ஓரத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. | குற்றியின் மறுபுறம், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் “இருபது ரூபாய்” என்ற சொற்களுடன் “20” என பெரிய இலக்கங்களில் முகப்புப் பெறுமதியினையும் அதற்கு கீழ் “2020” என்ற வருடத்தினையும் காண்பிக்கின்றது. “இலங்கை” என்ற சொல் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் குற்றியின் மேல் ஓரத்தின் விளிம்பில் தோன்றுகின்றது. |



| விபரங்களும் உற்பத்திக் குறிப்புக்களும் | | | |
|---|---|---|---|
| குற்றி மீதான ஆண்டு | 2020 | வார்ப்பு | 5,000,000 குற்றிகள் |
| உலோகம் | நிக்கல் பூசப்பட்ட உருக்கு | வடிவம் | ஏழு கோணம் |
| குற்றியின் வகை | சுற்றோட்டம் | ஓரம் | தட்டை |
| விட்டம் | 28 மிமீ | தடிப்பு | 2 மிமீ |

முதலாவது குற்றி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தேசமான்ய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் அவர்கள் மூலம் இலங்கையின் அதிமேதகு சனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கு 2021.02.24 அன்று சனாதிபதி செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.



உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஊடாக 2021.03.03ஆம் திகதி குற்றி சுற்றோட்டத்திற்கு விடப்படும் என்பதுடன் ஏற்கனவே சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளுடன் சேர்த்து கொடுப்பனவுகளுக்காகப் பயன்படுத்தக்கூடியவையுமாகும்.

| மேலதிகத் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: | தொலைபேசி | தொலைநகல் |
|---|---|---|
| நாணயக் கண்காணிப்பாளர் | +94 11 247 7587 | +94 11 247 7726 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | +94 11 247 7152 | +94 11 247 7701 |
| மின்னஞ்சல் | currency@cbsl.lk | |

நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01